டத்திற்கு இத்தனைப் பள்ளிகள் என்று அறிவிக்க இயலுமா? அல்லது, ஒன்றியத்திற்கு இத்தனைப் பள்ளிகள் என்று டார்ஜெட் நிர்ணயிக்கப்படுமா? அல்லது தமிழகத்திலே இருக்கின்ற—கட்டிட வசதி தயார் நிலையில் இருக்கின்ற அத்தனைப் பள்ளிகளுக்கும் உத்தரவு பிறப்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிட வசதி தயாராக இருக்கக் கூடிய நிலைமையிலே இருக்குமானால், அது ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டிருக்கும். பள்ளிக்கூடம் நடத்தப்பட்டிருக்கும். அப்படி ஒன்றிரண்டு இல்லையானால், அது கவனிக்கப்படும். ஆனால் மற்ற இடங்களில், மாவட்டத்திற்கு இத்தனை என்றோ ஒன்றியத்திற்கு இத்தனை என்றோ பங்கிடுவது முறையல்ல, இந்த 439 கிராமங்கள் எங்கே இருக்கின்றனவோ, அங்கே பள்ளி தொடங்குவதுதான் அரசினுடைய நோக்கம்.

பாதி விலையில் உணவு விநியோக முறையைச் சிறைக் காவலர்களுக்கும் வழங்குதல்.

*4349—திரு. சு. குருநபதன் :
மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காவல் துறை காவலர் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பாதி விலையில் உணவு விநியோக முறையைப் போன்று சிறை காவலர்களுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மலிவு விலையில் காவல் துறை காவலர் பணியாளர்களுக்கு வழங்கப்படும் உணவு விநியோக முறையைப் போன்று, சிறைத் துறையில் உள்ள காவலர்களுக்கும் மலிவு விலையில் உணவு விநியோகம் வழங்க அரசுக்கு சிறைத் துறைத் தலைவர் அனுப்பிய செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இது உறுப்பினர் கேள்வி கேட்டபோது இருந்த நிலைமை; தற்போது, இதன் நிலைமை, 9—4—1990-ல் நடைபெற்ற மானியக் கோரிக்கையின் போது, அத்தியாவசிய உணவுப் பொருட்கள், காவல் துறையின ருக்கு அளிப்பதைப் போல, சிறைத் துறை அலுவலர்களுக்கும் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது நடை முறைப்படுத்தப்படும்.

1990 ஏப்ரல் 26]

திரு. சு. குருநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் காவல் துறையிலே பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்குக் குறைவாகத் தான்—அதேபோல் சிறையில் பணியாற்றுகின்ற அந்தக் காவலர்களுக்கும் குறைவாகத் தான்—சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு ஏதாவது திட்டம் வைத்து இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பது பற்றி குறிப்பு இல்லை. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மலிவு விலையில் கொடுப்பது பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது தொடர்பாக நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறையிலே வேலை செய்யும்படியான காவலர்களுடைய சம்பள வருமானம், வெளியில் இருக்கக் கூடிய காவல் துறையைச் சார்ந்த ஜவான்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பள அளவு கிடைக்காத நிலைமையில், அவர்கள் கொஞ்சம் வறுமையில் இருக்கிறார்கள். இன்றைக்கு, காவல் துறையில் உள்ளவர்களுக்கு வெளியிலே கிடைக்கும்படியான சலுகை விலையில் நியாய விலைக் கடைகளில் கிடைக்கக் கூடிய சலுகை விலையில் அல்ல; அதை விட பாதி விலை என்று எனக்கு ஞாபகம். குறிப்பிட்ட யூனிட், அவர்களுடைய குடும்பத்திற்கு நிர்ணயிக்கப்பட்டு, கம்மி விலையில் கொடுக்கிறார்கள். அதேமாதிரி முறையில், இவர்களுக்கும் அதே விலையில் ஏனென்றால், அவர்கள் கடுமையாக உழைக்கக் கூடியவர்கள், குறைந்த வருமானம் உள்ளவர்கள்-கொடுக்க வேண்டிய ஒரு நடவடிக்கையை அரசு எடுக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை அலுவலர்களுக்குக் கொடுப்பது போல, சிறைத்துறைப் பணியாளர்களுக்கும் அலுவலர்களுக்கும், பாதி விலையில் உணவுப் பொருட்கள் விநியோகிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்படும் என்று, ஏற்கனவே 9—4—1990-ல் இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து, சிறைத் துறைத் தலைவரின் அறிக்கை பெற்று, 10—4—1990–ல் அது பெறப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல, ஒரு குடும்பத்திற்கு 4-க்கும் மேற்படாத யூனிட் என்று வழங்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறையிலே பணியாற்றக் கூடிய பணியாளர்களுக்கு, பாதி விலையில் என்னென் சாமான்கள்

வழங்கப்படுகின்றன? ஒரு மாதத்திற்கு ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு நிர்ணயம் செய்து வழங்கப்படுகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

9-10 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு அலுவலர் குடும்பத்திற்கு மாதத்திற்கு நான்கிற்கு மேற்படாத யூனிட்டுகள் வழங்கப்படும். ஒரு யூனிட்டிற்கான செலவு 13 ரூபாய் 60 பைசா. குடும்பத்திற்கு 4 யூனிட்டுகள் என்ற கணக்கின்படி, 2,851 பேருக்கு இந்தச்சலுகை கிடைக்கும். கொடுக்கப்படுகின்ற பொருட்கள், அரிசி, துவரம் பருப்பு, உளுந்தம்பருப்பு, பாமாயில், சர்க்கரை, கோதுமை, ரவா அல்லது மைதா.

திரு. வி. கே. சின்னசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது காவல்துறை காவலர், பணியாளர்களுக்கு பாதி விலையிலே வழங்கப்படுகின்ற அந்த உத்தரவு எந்த ஆண்டு பிறப்பிக்கப்பட்டது? இதனால் ஆண்டிற்கு எவ்வளவு ரூபாய் செலவாகிறது? அதேபோல் இன்றைக்கு சிறைக் காவலர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமானால் கூடிய விரைவிலே வழங்கப் போவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள் அப்படியானால் அதற்கு ஒரு ஆண்டிற்கு எத்தனை கோடி செலவாகும், எவ்வளவு பணியாளர்கள் அதனால் பயன் பெறுவார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தக் கோரிக்கை 1982 ஆம் ஆண்டிலிருந்து பரிசீலனையில் இருந்து வருகிறது. 1982–லிருந்து பரிசீலிக்கப்பட்டு, பரிசீலிக்கபட்டு, அனுமதிக்கப்படவில்லை. 1988 ஆம் ஆண்டில் பரிசீலிக்கப்பட்டது. ஆனால் இப்போது தான் இந்தத் திட்டத்தை நம்முடைய அரசு பரிசீலித்து அனுமதித்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறைத் துறை மானியத்தை கவனிக்கவில்லை போல் தெரிகிறது. என்னுடைய துறையைச் சேர்ந்த அந்தப் பிரச்சினையைக் கவனிக்கவில்லை போல் தெரிகிறது. சிறைத் துறை மானியத்தின் போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையிலே பணியாற்றக் கூடியவர்களுக்கு கொடுப்பது போல், சிறைத் துறையில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கும் சலுகை விலையில் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பயனடைக்கூடியவர்கள் 2,851 பேர். இந்த ஆண்டிலிருந்து அது அமலுக்கு வரும். கிட்டத்தட்ட 18 இலட்சம் ரூபாய் செலவாகலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

1990 ஏப்ரல் 26]

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், ஜெயில் வார்டர்களுக்கும் பாதி விலையில் உணவுப் பொருட்கள் அளிப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். உத்தரவு எப்போது போட்டார்கள என்பதல்ல. அமல் படுத்தக்கூடியது தான் வரவேற்கத்தகுந்த விஷயம், என்ற நிலையில், அவர்களுக்கு அந்த வசதியோடு கூட, மற்ற பல வசதிகளும், குறிப்பாக, காவல்துறையினருக்கு இருக்கக் கூடிய ஊதிய உயர்வு சம்பந்தமாகவும், செய்ய வேண்டும். இல்லையெனில் அந்த வார்டர்கள் பொதுவாக வாழ்க்கையிலே துன்பமாக இருப்பதனால், அதன் காரணமாக அவர்களுடைய கோபத்தையெல்லாம் சிறைக் கைதிகள் மீது காட்டக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது, அந்த அடிப்படையில்தான் நானும் சிறைச் சாலையில் 2, 3 ஆண்டுகள் இருந்து அதைப் பார்த்து அனுபவப்பட்டவள் என்ற முறையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் விரைவிலேயே அந்த வார்டர்களுக்குத் தேவையானதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது உள்ள பிரச்சினை மலிவு விலையில் உணவுப் பொருள் கொடுப்பது பற்றியது. இது பற்றி அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. அறிவிப்பைத் தொடர்ந்து உத்தரவு பிறப்பிக்கப்பட இருக்கிறது. பலன் அடையக் கூடியவர்கள் எண்ணிக்கை 2,851 என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல்துறையிலே பணியாற்றக்கூடிய காவலர்கள் 50,000 பேருக்கு மேல் இருக்கின்ற காரணத்தால், அவர்கள் கோரிக்கை வைக்கவும், அரசிடத்திலே தங்களுடைய உரிமையை நிலை நாட்டிக்கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் சிறைத்துறையிலே பணியாற்றக்கூடிய வார்டர்கள் மிகவும் குறைந்த அளவிலே, அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், 2,800-க்குட்பட்ட நிலையில் இருக்கிற காரணத்தால், அவர்களுடைய குரல் அவ்வளவு வலிவான குரலாக ஒலிக்காத காரணத்தினாலே அவர்கள் பல உரிமைகளைப் பெறுவது கஷ்டமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் 9—4—1990—லிருந்து பிற காவலர்களுக்குக் கொடுக்கக் கூடிய வாய்ப்புகள் சிறைத் துறையிலே இருக்கிற வார்டர்களுக்கும் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இந்த வார்டர்களைப் பொறுத்த அளவில், தண்டனை அடையாத கைதிகளாகத் தான் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய அந்தப் பிரச்சினையை கவனிக்கவும், அந்தக் குறைபாடுகளை நிவர்த்திக்கவும் ஒரு குழு அமைத்து அந்த சிறைத் துறைப் பணியாளர்களுடைய கவலையைப் போக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : குழு அமைக்கின்ற யோசனை தற்போது இல்லை. இந்தக் கோரிக்கை பல ஆண்டுக் காலமாக கவனிக்கப்படாமல், இப்போதுதான் கவனிக்கப் பட்டிருக்கின்றது என்பதைத் தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1982 ஆம் ஆண்டிலிருந்து இந்தக் கோரிக்கை இருந்து வந்திருக்கிறது. 1990 ஆம் ஆண்டில்தான் நிறைவேறி யிருக்கிறது.

நாகப்பட்டினத்தில் புதிதாக நீதிமன்றம் அமைத்தல்.

* 4874—திரு. துரை சந்திரசேகரன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை கிழக்கு பகுதிக்கு நாகப்பட்டினத்தில் புதிதாக ஒரு நீதிமன்றத்தை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9–15 மணி

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் நாகையில் அமைந்திருக்கின்ற நீதிமன்றம் வெள்ளையர்கள் காலத்தில் கட்டப்பட்ட ஒரு சிறிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது, வழக்குகள் நடைபெறுவதற்குத் தடையாகவும், கட்டிடம் பழுது அடைந்த நிலையில் இருப்பதாலும், போதிய கட்டிடம் கட்ட அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய மூலக் கேள்வி, தஞ்சை கிழக்குப் பகுதிக்கு நாகப்பட்டினத்திற்கு புதிதாக ஒரு நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா என்பதுதான். அதற்கு இல்லை என்று பதில்

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS